விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 ஆவணி 13 ஜூலைஜ் 12 இதழ் 200
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 29-8-1985

## யாழ். நகர் நேற்று.....



நேற்றுப் பகல் பத்து மணிமுதல் பன்னிரண்டு மணிவரை நடைபெற்ற ஹர்த்தாலின்போது யாழ் நகர் செயலிழந்தது வாகனங்கள் கூட அந்தந்த இடங்களிலேயே நின்றன.

— படங்கள்: 'தேவா'

★ இலங்கை இனப் பிரச்னைக்குத் தீர்வுகாண உதவும்

# செயலறிக்கை டில்லியில் தயார்!

# 'ஹெக்டர்' கையொப்பமிடுவார்?

(புதுடில்லி)

இலங்கை இனப் பிரச்னைக்குத் தீர்வுகாண உதவும் செயலறிக்கை ஒன்று தயாரான நிலையில் இருப்பதாகவும், இந்த அறிக்கையில் கல நிதி எச், டபிள்யூ. ஜெயவர்த்தன எந்த நேரத்திலும் கையொப்பமிடலாம் என்றும் புதுடில்லியிலிருந்து வெளியான தகவல்கள் தெரிவித்துள்ளன.

(5ம் பக்கம் பார்க்க)


## ✯ பாலசிங்கம், சந்திரகாசன்போன்று தமிழ்த்தீவிரவாததலைவர்கள் மீது இந்தியா நடவடிக்கை எடுக்காது!

(புதுடில்லி)

டாக்டர் எஸ். ஏ. பாலசிங்கம், திரு. எஸ். சி. சந்திரகாசன் ஆகியோர்மீது இந்தியமத்தியஅரசு மேற்கொண்ட நடவடிக்கை போன்று, தமிழ்நாட்டிலுள்ள தமிழ்த் தீவிரவாதத் தலைவர்கள் மீது எக்காரணம் கொண்டும் 'நாடுகடத்தல்' நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்று பாரதப்பிரதமர் திரு ராஜீவ்காந்தி உறுதி

(5-ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகர் ஸ்தம்பிதம்!



(கா. யோகநாதன்)

யாழ் நகரம் நேற்றுக் காலை இருமணிநேரம் செயலிழந்து முற்றாக ஸ்தம்பித்தது தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) கட்டுப்பாட்டில் இந்த இரு மணிநேரமும் யாழ் நகரம் இருந்தது.

இதேபோன்று யாழ். மாவட்டத்திலுள்ள மற்றும் இடங்களும் இருமணிநேரம் செயலிழந்து காணப்பட்டன.

வெலிகடைச் சிறையில் உண்ணாவிரதம் இருக்கும் இளைஞர்களுக்கு ஆதரவாகநேற்றுக் காலை 10 மணிமுதல் 12 மணிவரை 'கண்டன இடைநிறுத்தம்' செய்யுமாறு அரசகூட்டுத்தாபன தனியார்துறை ஊழியர்களுக்கு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்(புளொட்)வேண்டுகோள் விடுத்திருந்தது.

நேற்றுக்காலை 6 மணிமுதல் மிகக்குறைவான இ.போ.ச. பஸ்கள் சேவையில் ஈடுபட்டிருந்தன. மினிபஸ்களும், யாழ் பஸ் நிலையம் வந்து தரித்துநின்றன.

பெரும்பாலான கடைகள் நேற்றுக்காலை திறக்கப்படவில்லை. காலையில்தேநீர்க்கடைகள் மட்டும் திறந்திருந்தன.

(6-ம் பக்கம் பார்க்க)

## சிறையில் எழுதப்பட்ட கடிதம் பற்றி வண. சிங்கராயர் சாட்சியம்

(கொழும்பு)

"பி. 46 என்ற இலக்கமிடப்பட்ட ஆவணத்தை நான் எழுதினேன் பிதா ஜெயதிலகராசாவும் மற்றவர்களும் எனக்கு எழுதச்சொன்னபடியால் எழுதினேன். அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டது அப்போது எனக்கு விளங்கிக்கொள்ளமுடியாமல் இருந்தது என்று வண பிதா சிங்கராயர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி எச் டபிள்யூ,

5ம் பக்கம் பார்க்க)

## 'ஏனைய குழுக்களுடன் 'புளொட்' இணைந்தது!'

(புதுடில்லி)

'தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) ஏனைய விடுதலை இயக்கங்களுடன் இணைந்து தமிழ் மக்களுக்கான போராட்டத் தயாராகவுள்ளது' என்று அதன் தலைவர் திரு. உமாமகேஸ்வரன் புதுடில்லியில் கூறியுள்ளார். ... சகல இயக்கங்களுக்குமிடையில் சகல வழிகளிலும்

(5-ம் பக்கம் பார்க்க)

## குருநகர் சீநோர் ஊழியர் நடத்திய ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடைச் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து நேற்றுக்காலை குருநகர் சீ-நோர் நிறுவன ஊழியர்கள் ஊர்வலமொன்றை நடாத்தினர் மிகப் பெரியளவில் நடைபெற்ற இவ்வூர்வலத்தில் 200க்கும் அதிகமானோர் கலந்து

(5-ம் பக்கம் பார்க்க)

## யாழ். தபாலகவான் கடத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். தபால்கந்தோர், தபால் சேகரிக்கும் வான் நேற்று முன்தினமிரவு இனந்தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் தபால் கந்தோர் வான் ஒன்று கடத்தப்பட்டதைதொடர்ந்து சகல வான்களையும் கொழும்புக்கு அனுப்

(5-ம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதம் நீடிக்கிறது

### ராஜீவ், எம்.ஜி.ஆர், ராமராவுக்கு தந்திகள்!



(ஏ வி. மாணிக்கம்)

வெலிக்கடைச் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கும் தமிழ்க் கைதிகளின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றுமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகர் திரு ஜே. என் டிக்ஸிற்றுக்கும் அவசரத்

(6-ம் பக்கம் பார்க்க)

# விளம்பரம்

## தேவை

எலெக்ரிகல் வேக் சொப் பிற்கு (1) மேற்பார்வையாளர் ஒருவர், (2 வயறிங் வேலை தெரிந்தவர் ஒருவர், சொந்தக் கையெழுத்தில் - தகுதி, எதிர் பார்க்கும் சம்பளம், வயது குறித்து 3-9-85க்கு முன் விண்ணப்பிக்கவும். இல. 284, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.
284

லேடீஸ் சைக்கிள், காஸ் குக்கர், Rice Cooker மற்றும் பொருட்கள் தேவை. விளம்பர இல. 274, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 274

## விற்பனைக்கு

லம்பிரட்டா ஸ்கூட்டர் இத்தாலி டி. எல். மடல் 6 சிறி 500 - ரூபா 5,500/-, சிங்கர் குளிர்சாதனப்பெட்டி 6 ச. அடி. 1½ வருடம் ரூபா 8,500/- மாலை 3—6 மணி, ஸ்கந்தராசா, கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை.
277

## வகுப்புகள்

Quantity Surveying குறுகிய கால விசேடபயிற்சி 02-09-85 ஆரம்பமாகின்றது. Institute of Enginering Technology, 11-B Momsac Building, Stanley Road, Jaffna. (276)

ஊர்காவற்றுறை
ப. நோ. கூ. சங்கம்

### கேள்விப்பத்திரம்

மூவாயிரத்தி நானூற்றி இருபத்திநான்கு (3424) வெற்றுச் சாக்குகளுக்கு கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது. ரூ. 2/50 செலுத்தி சங்கத்தில் பெற்றுக்கொண்ட பத்திரத்தில் ''பொதுமுகாமையாளர், ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை'' என்னும் விலாசத்திற்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரிலோ கேள்விப்பத்திரங்களை 4-9-85ந் திகதிக்குமுன் அனுப்பிவைக்கவும்.

கேள்விப்பத்திரங்கள் 3-9-85ந் திகதி பகல் 12-00 மணிவரை விநியோகிக்கப்படும். விண்ணப்பதாரர் ரூ. 750/- வைப்புப்பணம் செலுத்தி இருத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்.
26-8-85,
ஊர்காவற்றுறை. 278

### ரயிலிலிருந்து தூக்கி 'வீசப்பட்ட தமிழ் இளைஞர்

(திருகோணமலை)

திருகோணமலைக்குச் சென்றுகொண்டிருந்த ரயிலில் இருந்த தமிழ் இளைஞர் ஒருவர் ஆயுதந்தாங்கிய சிருடையினரால் தாக்கப்பட்டதுடன், ரயில் பெட்டியிலிருந்து வெளியே தூக்கி வீசப்பட்டாராம்.

கந்தளாய் ரயில்நிலையத்தில் இச்சம்பவம் நேற்று இடம் பெற்றது.

வெளியே வீசப்பட்ட இளைஞர் படுகாயங்களுடன் மீண்டும் கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விளைஞர் 'வீடியோ' செட் ஒன்றும் வைத்திருந்தாராம். (ரா,மா)

# யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த. உயர்தர பரீட்சை

## ஆகஸ்ட் 1986 மீட்டல் வகுப்புகள்

க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு ஒருமுறையாவது தோற்றிய எவரும் இந்த மீட்டல்வகுப்புகளில் சேரலாம் பாடத்திட்டம் முற்றாக மீட்டல் செய்யப்படும். சேர விரும்புவோர் அக்கடமி காரியாலத்தில் உள்ள விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்கவும்.


**வகுப்புகள் 9-9-85ல் ஆரம்பமாகின்றன.**

பல்கலைக்கழக அனுமதிக்கு எமக்கூடாக பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் அநேகர் ஒவ்வொரு வருடமும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இது எமது திறமைக்குச் சான்றாகும்.

அதிபர்,
376, பிரதான வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
(4983) தொலைபேசி எண்: 22617

# 1-வது பிறந்ததின வாழ்த்து

செல்வி சாமினி



ஸ்ரீஸ்கந்தராசா
நிர்மலாதேவி
அவர்களின் சிரேஷ்ட
புத்திரி சாமினி தனது
முதலாவது
பிறந்த தினத்தை
29-ந் திகதி (1985-08-29)
வியாழக்கிழமை
தண்ணீர்ஊற்று.
முள்ளியவளையில்
கொண்டாடுகிறார்.
அவரை
மாமனார் சுகுமாருடன்
அப்பா, அம்மா, பூட்டி,
பேரன்மார்கள,
பேத்திமார்கள். ரஞ்சி
சித்தியும் சேர்ந்து சகல
செல்வங்களும் பெற்று நீடூழி வாழ்க என
வாழ்த்துகிறோம். (282)

# பிறந்த தின வாழ்த்து

செல்வி நிரஞ்ஷலா யோகநாதன்



மண்கும்பான் மேற்கைச்
சேர்ந்த
யோகநாதன் கனகேஸ்வரி
தம்பதிகளின் செல்வப்
புதல்வி நிரஞ்சலா தனது
முதலாவது பிறந்த
தினத்தை தனது இல்லத்தில் (29-8-85) வியாழக்கிழமை மிகக் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

இவரை
அப்பா, அம்மா, தம்பி, அப்பம்மா, ஐயா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்தி, அன்ரி, அக்கா, அண்ணர்மார், மச்சான்மார், மச்சாள்மார்
மற்றும்
உற்றார், உறவினர், சகலரும் பலகலைகளும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள். (280)

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் வி. ம. கண்ணையா அவர்கள்

(யாழ். மாகோ ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 12-12-1907 | 23-08-1983 |

தங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
44/4, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். (286)

காங்கேசன்துறை

# அருள்மிகு துர்க்காதேவி

ஆலய வருடாந்த உற்சவவிழா
எதிர்வரும் 2-ம் திகதி ஆரம்பம்



ஆவணி மாதம் 17-ம் திகதி (02-09-85) திங்கட்கிழமை உத்திர நட்சத்திரத்தில் நடைபெறும் அடியார்கள் வந்து இஷ்டசித்திகளைப் பெற்று ஏகுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

உற்சவவிழா தொடர்ந்து பத்து நாட்கள்வரை நடைபெற்று பூங்காவனத்துடன் முடிவடையும்.

ஆலய நிர்வாகம்

287

# ஓராண்டு நினைவஞ்சலி

அமரர் சோதிடர்

## இராமலிங்கத்தின் மனைவி நாகம்மா

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 15-02-1917 | 08-09-1984 |

ஆண்டு ஒன்று கடந்தும் உங்கள் நினைவு
எம் உள்ளங்களை விட்டகலவில்லை,
தங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
கலாபவனம், 4-ம் வட்டாரம், புங்குடுதீவு. (263)

# ஓராண்டு நினைவஞ்சலி

## வேலாயுதபிள்ளை சிவநாதன் (சிவா)



மலர்வு:
23-06-1956

உதிர்வு:
08-09-1984

தாய், மனைவி,
பிள்ளைகள், சகோதரன்
மற்றும் நண்பர்கள்

வாகியடி,
மீசாலை தெற்கு,
மீசாலை. (272)

# 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்
அரியரட்ணம்
மதியாபரணம்

(நெல் களஞ்சியப்
பொறுப்பாளர், அடம்பன்)

மலர்வு: 16-04-1933
உதிர்வு: 30-07-1985

எங்கள் இல்லத்தில் அணையாத தீபமாக ஒளி வீசிய
அன்புத் தெய்வமே! ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்ட பாசப் பிணைப்பே!
உங்கள் பிரிவால் உளம் உருகும் அன்பு மனைவி
மனம்கலங்கி ஏங்கும் அருமைப் பிள்ளைகள்,
உமது பிரிவால் வாடும் உற்றார், உறவினர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஈமைக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், சரீர உதவி புரிந்தவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
அன்பு மனைவி, அருமைப் பிள்ளைகள்
கித்துசிட்டி, புலோலி தெற்கு, புலோலி. 283

**மணிவாக்கு**

அறியாமை ஆண்டவனின் சாபம்; அறிவோ விண்ணை நோக்கி நாம் பறக்கும் இறக்கை.

— ஷேக்ஸ்பியர்

# நமது நோக்கு

## தீர்ப்பு இங்குதான் உண்டு

வெலிக்கடை தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக யாழ். பல்கலைக்கழக மாணவர் உண்ணாவிரதம் நடத்துகின்றனர்.

இலங்கைத் தமிழ்த்தலைவர்களை இந்தியாவிலிருந்து வெளியேற்றியதைக் கண்டித்து சென்னையிலும், மதுரையிலும் பொருந்த ஊர்வலமும் உண்ணாவிரதமும் நடைபெறுகின்றன.

ஆவிசோரும் இளைஞர்களுக்கு ஆதரவாக யாழ். நகரில் நேற்றுக்காலை கண்டன இடைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

இளைஞர் அநீதியைச் சகிக்காது கொதித்தெழுவது இன்று மூன்றாம் உலக நாடுகளில் மட்டுமல்ல. விருத்தியடைந்த செல்வந்த நாடுகளிலும் காணப்படுகிறது. செல்வந்த நாடுகளில் எல்லோரும் செல்வர் அல்லர்;

உலகெங்கிலும் இந்தப் பின்னணி பழங்கதையாகும். இக்கட்டத்தில் எங்கள் இச்சிறு நாட்டில் உரிமை இழந்து இன்று உயிர்உடைமை பாதுகாப்பு இழந்து வாழும் ஒரு சிறு கூட்டத்தினருக்கு இன்றைய ஆட்சி இலகுவில் அஞ்சாது

விரலுக்கேற்ற வீக்கமென்பது போல் இங்கும் செல்வர் கூட்டம் ஒன்று உண்டு. அது சனத செல்வத்தை அதிகரிக்க இன்று ஆட்சியின் பொருளாதாரக் கொள்கையையும் நன்கு பயன்படுத்தும்.

எனவே இங்கு வறுமையால் வாடும் மக்கள் எங்கள் பொருளாதார சுபீட்சம் தங்கள் கையில் தான் உண்டு என்பதை நினைவிற் கொள்ளவேண்டும்; அன்று உழைத்து அன்று உண்டு காலம் விடும் பெரும்பான்மை மக்கள் இன்று என்ன பேசிக் கொள்கின்றனர்? சிங்கள மக்களுக்கு அரசு பாதுகாப்பளிக்க வேண்டும் என்பது பொதுவானது. இதற்கு மத்தியதென்ன? தலைவர்களின் எச்சரிக்கை! "தமிழ் பயங்கரவாதிகள், மார்க்ஸிசவாதிகள் நாட்டைக் கைப்பற்ற முயல்கின்றனர்; சிங்கள மக்களே ஒற்றுமைப்படுங்கள்" என்பதே.

சுதந்திர இலங்கையில் மக்களுக்கு மிக அவசியமானதொன்று உணவு; மானத்துக்கு உடை அவசியம்; இருப்பினும் உயிர் தப்பி வாழ சுகாதாரம்: நோய்க்கு மருந்து. மருத்துவசேவை: மன வளர்ச்சிக்கு கல்வி. இவற்றின் முன்னேற்றம், 37 வருட காலத்தில் எவ்வாறு கணிக்கப்படுகிறது?

"உணவில் தன்னிறைவு கண்டது மட்டுமல்ல ஏற்றுமதியும் செய்கிறோம்" என்ற கோஷம்! இதற்குச்சான்றாக அடிக்கடி பத்திரிகைகளில் வரும் துரித மகாவலித்திட்டப்படங்களும், தினசரிப் பத்திரிகைகளை தினந்தோறும் அலங்கரிக்கும் தேசத் தலைவர்களின் படங்களுமா!

பொதுமக்கள் இப்பத்திரிகைப் பிரசாரத்தில் அவநம்பிக்கை கொண்டாலும் அரசாங்க சார்பில் வெளிவரும் செய்திகளும், படங்களும்- இன்றைய பயங்கரத் தொற்றுநோய் ரி.வி (பியல்ல)யும் அவர்களை மயக்கத்தக்கவை

எனவே ஒரு சிங்கள-தமிழ் யுத்தம் தயாராகிறதென்றும், சமாதானம் கிட்டாவிட்டால் அதே ஒரு வழி என்றும் மீண்டும் ஒரு வெருட்டு மக்களுக்கு உற்சாகமளிக்குமென்ற நம்பிக்கையில் உதயமாகின்றது.

இந்த நிலைமையில் உண்ணாவிரதமும், வட இலங்கை, தென்னக ஆர்ப்பாட்டங்களும் என்னசெய்யுமென்று நாம் மனமுடையக் கூடும்.

அது உண்மையானாலும் வேறென்ன வழி உண்டு?

எந்த வழியும் இங்குதான் உண்டு என்று நாம் நம்ப வேண்டும். எங்கள் நலத்துக்கு இருப்பிடம் வேறு எங்கோ இருக்கிறதென்று எண்ணி நாம் ஏமாற்றமடைய வேண்டியதில்லை; கேட்டைக் களைவதும் நலத்தை நாடுவதும் இங்குதான் நடக்கவேண்டும்.

எனவே, இங்கு நடைபெறும் எதிர்ப்புப் போராட்டத்தின் பலத்தில் எங்கள் சுதந்திர வாழ்வு பெரிதும் தங்கியிருக்கிறது.

எதிர்ப்பு என்றால் எங்கள் அப்பாவி மக்கள் நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் எதிரியினது துப்பாக்கிக்கும் குண்டுக்கும் பலிகொடுப்பதல்ல.

ஒழுக்கம் என்ற குன்றில் நின்று கட்டுப்பாடற்ற இராணுவம் போலல்லாமல், ஒழுங்கான போராட்டத்துக்குப் பொதுமக்கள் ஆதரவை நூற்றுக்குநூறு திரட்டுவதே ஒருவழி.

இதனை நாம கைவிட்டால் கையில்விளக்கைக் கொண்டு கிணற்றில்விழும் பேதையென்று எங்கள் தோல்வியை உலகம் இகழும்.

இங்கு ஒரு யுத்தம் என்றால் அதன் அர்த்தம் என்ன? 72சதவீத பெரும்பான்மைச் சிங்கள மக்களைக்கொண்ட நாட்டில் 12 சதவீத தமிழ் மக்களின் கதி என்ன? தெகை சற்றே கூடியிருந்தால்தான் என்ன?

''பயங்கரவாத ஒழிப்பு'' தமிழர் ஒழிப்பு என்ற கட்டத்தை ஒரு யுத்தம் கொண்டுவரும் இதனை 'இன ஒழிப்பு' என்று கொள்ளும் நிலை பூரணமாகும்.

தென்னாபிரிக்காவில் இன்று 'இன ஒதுக்கல்' முழுமூச்சாக அமுல்படுத்தப்படுகிறது

வட இலங்கை இன ஒழிப்பு முற்றிவரும் நிலைக்கு நாம் காத்திருக்க வேண்டுமா? பாரதத்தின் பக்கபலம் பலனளிக்கும்.

இன்று பாரத பிரதமர், தென் ஆபிரிக்கா தனது இன ஒதுக்கலைக் கைவிடும்படி றீகன், தாட்சர் நிர்ப்பந்திக்க வேண்டுமெனக் கேட்டிருக்கிறார்

அதேமாதிரி இலங்கை அரசை பாரதப் பிரதமர் நேரில் நிர்ப்பந்திக்கவேண்டுமென நாம் கேட்கின்றோம். இத்தகைய ஆதரவு பாரதம் நல்குமானால் இங்கு வாழும் தமிழ் மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள பலம்பெறுவது நம்பிக்கை.

# இன்று செல்வச்சந்நிதி முருகன் தேர் விழா

தொண்டமானாற்றிலே ஆற்றங்கரையிலே வீற்றிருந்து தன்னைச் சரணடைந்த பக்த அடியார்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறான் அன்னதானக் கந்தன். தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்பும் ஒருங்கே அமைந்துள்ள திருத்தலத்திலே எழுந்தருளியிருக்கும் ஆறுபடை வீடு கொண்ட முருகன் தன்னை நாடிவந்தோர்க்கு வினைபோக்கி, துயர் தீர்த்து வேண்டிய வரத்தைதயளித்து அருள் பாலிப்பவன்

செல்வச்சந்நிதி முருகனுக்குச் சுமார் 25 இலட்சம் ரூபா செலவில் சித்திரத்தேர் ஒன்று அமைக்க முருகபக்தர்கள் முயற்சிகளை மேற்கொண்டு தமிழ்நாட்டின் பிரசித்தி பெற்ற திருவாரூர் ஆலயத் தேரைப் போன்ற உருவ அமைப்பில் சுமார் 44 அடி உயரமுடையதும், 500க்கும் மேற்பட்ட சிற்பங்களைக் கொண்டதும் சிறந்த தொழில் நுட்பங்களடங்கியதுமான அழகிய சித்திரத்தேரை தமிழ்நாட்டு சிற்பாசாரிகளால் உருவாக்கி கடந்த வருடம் இம் முருகனின் சித்திரத்தேர் வெள்ளோட்டத்திற்கும் திருவருள்பாலித்திருந்தது. அத்துடன் இப்புதிய சித்திரத்தேருக்கான புதிய தேர்முட்டியொன்றும் சுமார் 5 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டதுடன் தேரோடும் வீதி மிக விசாலமாக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது.

இத்திருத்தலத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த 16ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இன்று வள்ளி, தெய்வானை சமேதராகச் சுவாமி தேரேறி வீதி வலம்வர பக்த அடியார்களின் அரோகரா கோஷம் வானைப் பிளக்கக் காண்போரை மெய் சிலிர்க்கவைக்கும். பல்லாயிரக்கணக்கான பக்தஅடியார்கள் இத்தேர்த் திருவிழாவிலே கலந்துகொண்டு முருகப்பெருமானின் அருளைப் பெற்றுய்வார்கள் நாளை 30ம் திகதி முருகப்பெருமான் தீர்த்தமாடுவார்.

— ஏ. என் எஸ்.
திருச்செல்வம்

## தமிழர் தகராறில் வடக்கு முஸ்லிம்களின் நிலைப்பாடு!

இஸ்லாமிய விழிப்புணர்வு ஒன்றியம் – மன்னார்

காலத்திற்குக் காலம் நாடளாவிய ரீதியில் பணம் படைத்த சில கொழும்பு வாழ் முஸ்லீம் முதலைகள் தம்மைத் தலைவர்களென மணிமகுடம் சூட்டிக்கொண்டு பேரினவாத அரசின் பெருச்சாளிகளாகத் திகழ்ந்துவருவது கண்கூடு. இவர்கள் உழைக்கும் முஸ்லீம் பாட்டாளி மக்களின் உரிமைக்காகப் போராடுவதாகத் தம்மைப் பறைசாற்றிக் கொண்டு அரசின் முந்தானைகளையும், முழவேட்டிகளையும் இறுகப் பற்றிக்கொண்டு தமது சுய இலாபத்திற்காக இஸ்லாமிய இனத்தையே விலைக்கு விற்றுவந்தனர் இந்நிலை இன்னும் தொடர்ந்துகொண்டிருப்பது

### மக்கள் கருத்து

வேதனைக்குரியதே. வட, கிழ் மாகாண முஸ்லிம்கள் தமது சகோதரர்களான தமிழர்களுடன் ஒரே சூழலில் இடப்பட்ட பிட்டும், தேங்காய்ப் பூவும் போல வெறுப்புணர்வுகளை மறந்து, கசப்புணர்வுகளைக் களைந்து ஒட்டிஉறவாட விரும்புகின்றனர். இதுகாறும் இவர்கட்குஇடையே இருந்த பாரிய இடைவெளி வெகுவாகக் குறைந்துவருகின்றது இருட்டுலகினிலே குருட்டுக் குழந்தைகளாக வாழும் நம்மவரைப் பிரித்து வேறாக்கி வேடிக்கை பார்க்க முயலுகின்றனர் சில அராஜகம் படைத்தவர்கள் படித்த பண்பற்ற இனத்தைக் கருபோடும் இவர்கட்கு இனியும் இங்கு இடமில்லை. பட்டம் பதவிகட்காக அற்ப சொற்ப சலுகைகளுக்காக, எயமனத்தை பலிக்கடாவாக்கும் இவர்களின் கொட்டம் அடங்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை அரசின் பெரிய இடத்துப் பிள்ளையாக செல்லப்பிள்ளையாக எம்மை மறந்து ஏகபோக வாழ்க்கை நடாத்தும் இந்த எட்டப்பர்கள் எம்மினத்தின் விடிவைப்பற்றிக் கவலைப்படாது அரசின் 'குளு குளுக்' கார்களிலே பவனிவருகின்றனர் மக்களைச் சுதந்திரமாகச் சுரண்ட தமக்குச் சுதந்திரம் இல்லையே என்ற அங்கலாய்ப்பில் காலத்தைக் கழிக்கின்றனர். இவர்களின் தந்திர மந்திரங்கட்கும், ஜம்பஜாலங்கட்கும் மயங்கிய காலம் மலையேறிவிட்டது.

தற்போதைய இனப்பிரச்சினை இருசாராருக்கும் பொதுவான ஒரு விவகாரமே. தமிழர்கள் தம்முரிமைக்காக இன்று போராட்டக்களத்திலே குதித்துவிட்டனர். எந்த அடக்குமுறைக்கு எதிராக அவர்கள் கிளர்ந்து எழுந்துள்ளனரோ அந்த ஒடுக்குமுறைகளை எம்மவரும் அனுபவித்தே வருகின்றனர் அவர்களின் கோரிக்கைகள் எமக்கும் ஏற்புடையவொன்றே இதில் இஸ்லாமிய இனம் தனியே ஒதுங்கியிருக்க முடியாது நாம் வாளாவிருந்தால் நாளைய தலைமுறை நம்மவரையே பழி கூறும்.

திம்பு மாநாட்டிலே தமிழர்கள் தமது குறைந்த பட்சக் கோரிக்கையான வடக்கு-கிழக்கு ஒன்றிணைப்பு யோசனைகளை முன்வைத்தபோது சில கொழும்புவாழ் முஸ்லீம் தலைவர்கள் முந்திக்கொண்டு தம் எதிர்ப்பைத் தெரிவித்தனர். முன்னுக்குப்பின்முரணான கருத்துக்களைக் கக்கி எம்மை முப்பிடித்தனர். வடக்கு கிழக்கு முஸ்லீம்களின் நிலைப்பாட்டை உணராது, அவர்களை எள்ளளவும் கணக்கிற்கு எடுக்காது தாம் நினைத்தபடி பத்திரிகைகளிலே அவசர அவசரமாக அறிக்கைகளை விட்டனர். இந்நிலையில் முழுநேர அரசியல் வாதிகளும், பகுதிநேர தொழிற்சங்கவாதிகளும் ஒருவரைஒருவர் முட்டிமோதினர். எம்மினத்திற்காக இரத்தக் கண்ணீர் வடிப்பதாகப் பாசாங்கு காட்டினர். எந்த ஒரு பிரமுகரின் அறிக்கையிலும் வடமாகாண முஸ்லீம்களின் எதிர்காலம் என்ன என்பது சுட்டிக்காட்டப்படவில்லை. வடமாகாண முஸ்லிம்களைப் புறக்கணித்து அநாதைகளாக நினைத்து நாதியற்றவர்கள் என முத்திரைகுத்தி ஒதுக்கித்தள்ளினர் அவர்களை அரவணைக்க இந்த நீலக்கண்ணீர் வடிப்பவர்களின் கரங்கள் தயங்கின.

தமிழர் பிரச்சினையின் உச்சகட்டமான முதற்கட்டப்பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இந்தத் தான் தோன்றித்தலைவர்கள் பம்மாத்துக்காக ஒரு நடிப்பு நடித்தனர். மக்கள் மன்றத்திலே தீர்மானிக்கப்படவேண்டியவை அம்சங்களை இவர்கள் தன்னிச்சையாக அணுகி, அரைவேக்காட்டுத்தனமான முடிவுகளை எடுத்து, எம்மினத்தை நிர்க்கதிக்குள்ளாக்கினர். சென்னைக்குச்சென்று தீவிரவாதத் தலைவர்களைச் சந்தித்து எம்மினத்தின் விடிவிற்கு ஒவ்வாத கருத்துக்களை அவர்களிடம் தெரிவித்து தீவிரவாதத்தலைவர்களின் பரிகாசத்திற்கும் உட்பட்டனர். தற்போதைய திம்பு மாநாடு திருப்திகரமாக

(5-ம் பக்கம் பார்க்க)

## காத்திடுவாய் கந்தா!

சொல்லொண்ணாத் துயரங்களால் துடித்து சாகும்
எம்மக்கள் இடுக்கண்கள் அதனைமாற்ற
வெல்லும்வழி ஏதுண்டு சொல்வாய் என்று
கோஷமிட்டோம் அரோகரா நல்லைக் கந்தா!
வேலுண்டு வாளுண்டு உன்கரத்தில்
வாகனமாய் மயிலுண்டு அதிலேவந்து
பாழ்பட்டோர் இரக்கமின்றி வைக்கும் தீயில்
காத்திடுவாய் கந்தா நீ நாளும் எம்மை

-இராஜலிங்கம்

★ சங்குவேலி ஸ்ரீ சிவஞானப்பிள்ளையார்கோவில் இன்று தேர்த்திருவிழா

## சித்தி நல்கும் சிவஞானப்பிள்ளையார்

சீர்பூத்திலங்கும் சங்குவேலி வேழமுகனே!
சித்திவெலாம் நல்கும் சிவஞானப்பிள்ளையாரே!
ஆர்த்த பிறவித்துயர் நீக்கும் கஜமுகனே!
அன்பருக்கு அன்பனே! விக்கினேஸ்வரனே!
தீராவினைகள் தீர்ப்பவனே! ஐங்கரனே!
திருவருளைத் தருபவனே! சித்திவிநாயகனே!
ஏர்மேவு சங்குவேலி சிவஞானப்பிள்ளையாரே
எழில் பொங்கும் இரதமேறி எமைக்காத்தருள்வாயே!

கு. க கௌரி

## 25 வருடத்தில் 6-வது தடவையாக

# நைஜீரிய அரசாங்கம் ஆட்சி கவிழ்ப்பு!

## இப்ரஹிம் பாபன்கீடா புதிய அதிபர்!!

லேகோஸ், ஆக-28

**நைஜீரியாவின் இராணுவ ஆட்சி கடந்த செவ்வாய்க்கிழமை கவிழ்க்கப்பட்டது. புதிய ஜனாதிபதியாக இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் இப்ராஹிம் பாபன்கீடா ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இந்த ஆட்சி மாற்றம் ஒரு இரத்தம் சிந்தாப் புரட்சி என்று தெரிவிக்கப்பட்டது.**

நைஜீரியாவின் 25 வருடகால சுதந்திரத்தில் இடம்பெற்ற ஆறுவது ஆட்சிமாற்றம் இது எனக் கூறப்பட்டது.

1983ம் ஆண்டிலேயே இறுதியாக ஆட்சிக் கவிழ்ப்பு இடம்பெற்றது. மக்கள் ஆட்சித் தலைவரான ஜனாதிபதி ஷேகோஷகாரியிடமிருந்து அப்போதைய இராணுவத் தளபதி மொஹமட் புஹாரி ஆட்சியைக் கைப்பற்றினார். தொடர்ந்து 20 மாத காலமாக அவர் இராணுவ ஆட்சியை மேற்கொண்டார்.

"மேஜர் ஜெனரல் மொஹமட் புஹாரியின் ஆட்சி கடுமையானதாகவும், மக்களுடன் ஒத்துழைக்காததாகவும் விளங்கியது.

ஷேகோஷகாரியின் ஆட்சி உறுதியற்றதெனத் தெரிவித்தே அவரது ஆட்சியை புஹாரி கவிழ்த்தார். ஆனால் புதிய ஆட்சியிலும் எதுவித குறிப்பிடத்தக்க அம்சங்கள் காணப்படவில்லை. ஷகாரியின் ஆட்சியை ஒத்ததாகவே புஹாரியின் ஆட்சியும் விளங்கியது" என்றார்.

நைஜீரியாவின் ஸ்திரமற்ற பொருளாதார நிலையே இத்தகைய ஆட்சி மாற்றங்களுக்கு முக்கிய காரணமென்று மேற்கத்திய அவதானிகள் தெரிவித்தனர். புதிய ஆட்சியாளர் பொருளாதாரப் பிரச்னைக்குத் தீர்வு காணுவிடில் ஆட்சிக் கவிழ்ப்பு ஒரு தொடர்கதையாக இருக்குமென்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தையடுத்து நைஜீரியாவின் சகல கடல், ஆகாய மார்க்கப் போக்குவரத்து நிலையங்களும் மூடப்பட்டுள்ளன. தரைப் பகுதி எல்லைகளும் மூடப்பட்டன. தொலை தொடர்புகள் அனைத்தும் வெளிநாடுகளுடன் துண்டிக்கப்பட்டுள்ளன.

ஆட்சி கவிழ்க்கப்பட்ட மொஹமட் புஹாரியும் அவரது ஆட்களும் எங்குள்ளார்கள் என்ற விபரம் தெரிவிக்கப்படவில்லை. (இ)

## உலகச் செய்திகள்

இவரிடமிருந்தே கடந்த செவ்வாய்க்கிழமை இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் இப்ராஹிம் பாபன்கீடா ஆட்சியைக் கைப்பற்றினர்.

புதிய ஆட்சியாளர் நேற்று நாட்டு மக்களுக்கு வானொலி மூலம் உரையாற்றினார். அவர் கூறியதாவது:-

புதிய ஆட்சியாளர் பாபன்கீடா தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள பத்திரிகையாளர்களை விடுதலைசெய்யப்போவதாக அறிவித்துள்ளார்! அத்துடன் தடுப்புக் காவலிலுள்ள ஏனையோரையும் விசாரணை செய்து விடுதலைசெய்வதாகவும் அவர் அறிவித்தார்.

## "விடுதலை செய்! அல்லது விசாரணை செய்!"

(யாழ்ப்பாணம்)

"விடுதலைசெய்! அல்லது விசாரணைசெய்"! என்ற தலைப்பிலான சுவரொட்டிகள் யாழ். நகரெங்கும் பரந்தளவில் ஒட்டப்பட்டிருக்கின்றன.

சுவரொட்டிகளில் ஸ்ரீலங்கா சிறைக்கூடங்களில் (தங்காலை) வாடும் இளைஞர்கள் இம் மாதம் 8ம் திகதி முதல் ஆரம்பித்திருக்கும் சாகும் வரையிலான உண்ணாவிரதப்போராட்டத்திற்கு எம்மால் இயன்ற பங்களிப்பை வழங்குவோம் என்ற வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன. பிரசுரத்தின் கீழ் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. (ச)

## 20 வருட சுயாட்சி பூர்த்தி:

# திபெத்தியர்களுக்குசீனர்கள் கடிகாரம்,தேயிலை அன்பளிப்பு

பீக்கிங், ஆக-28

சீனாவின் கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட்ட திபெத்தின் 20-வது வருட சுயாட்சிப் பூர்த்தி நேற்று சீனாவில் குதூகலமாகக் கொண்டாடப்பட்டது.

இதையடுத்து சீன மக்கள் திபெத்வாசிகளுக்கு வாழ்த்துக்களையும், அன்பளிப்புகளையும் வழங்கினர். சுமார் 5 லட்சம் தேயிலைப் பெட்டிகளும், 90 ஆயிரம் எலெக்ரோனிக் கடிகாரங்களும் திபெத் மக்களுக்கு சீனர்களால் வழங்கப்பட்ட அன்பளிப்புக்களில் முக்கியம் பெற்றன.

சீனாவின் கட்டுப்பாட்டினுள் திபெத் கொண்டுவரப்பட்டதையடுத்து திபெத்தின் மதத் தலைவரும், கூடுதல் அரசியற் செல்வாக்குப் பெற்றவருமான 'தலாய்லாமா' இந்தியாவில் அஞ்ஞாதவாசம் இருந்து வருகிறார்.

இவர் இக்கொண்டாட்டங்களைக் கண்டித்துள்ளார். கூடவே திபெத்தியர்களை பலாத்காரமாகவே இக்கொண்டாட்டத்தில் சீனா ஈடுபடுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

திபெத் இமயமலைச் சாரலிலுள்ள ஒரு சிறிய இராச்சியமாகும். சீனாவின் எல்லையில் உள்ள இப்பகுதியை சீனா கடந்த 20 வருட காலமாகத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளது. (கி)

# தென்னாபிரிக்காவில் இரு முக்கியஸ்தர்கள் கைது!

ஜொஹன்னஸ்பேர்க். ஆக. 28

தென்னாபிரிக்காவில் இருமுக்கிய கறுப்பினப் பிரமுகர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் நோபல் பரிசுபெற்ற வண. டுட்டுவின் புதல்வர் திரு. டிரேவர் டுட்டு. மற்றவர் டாக்டர் அலன் புஸாக் என்பவராவர்.

டாக்டர் அலன் புஸாக் தென்னாபிரிக்காவின் ஐக்கிய ஜனநாயக முன்னணி என்ற மிதவாத அமைப்பின் தலைவராவார்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் திரு நெல்சன் மண்டேலாவின் சிறைக்கூடப்பகுதி வரை அவரை விடுதலை செய்யக்கோரும் பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை டாக்டர் புஸாக் ஒழுங்கு செய்திருந்தார்.

இந்த ஊர்வலத்தில் 20 ஆயிரம் பேர் பங்கு கொள்ள ஏற்பாடாகியிருந்தது. இவ்வூர்வலத்திற்கான இறுதி ஆயுத்தங்கள் இடம்பெற்றபோதே அவர் கைதானார்.

நோபல் பரிசு பெற்ற கறுப்பின அங்கிலிக்கன் மேற்றிராணியார் வண. டெஸ்மண்ட் டுட்டுவின் மகன் டிரேவர் டுட்டுவும் நேற்றுக் கைதானார் அவசரகால விதிகளை மீறினார் என்ற குற்றச்சாட்டின் மீது இவர் கைது செய்யப்பட்டார்.

இவர் கைது செய்யப்பட்டதை இந்தியா வெகுவாகக் கண்டித்துள்ளது. விரைவில் இவர் விடுதலை செய்யப்பட வேண்டுமெனவும் அது கோரியுள்ளது.

இதேவேளை நெல்சன் மண்டேலாவின் சிறைக்கூடம் வரை நடத்தப்படவிருந்த ஊர்வலம் திட்டமிட்டவாறு நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (கி)

## உலகில் சிறுநீரகமாற்று

# சத்திர சிகிச்சைகள் 90 வீதம் வெற்றி!

—டாக்டர் பட்

சென்னை ஆக. 28

"உலகில் சிறுநீரக மாற்றுச் சத்திர சிகிச்சைகள் 90 சத வீதம் வெற்றியளித்து வருகின்றன" என்று அமெரிக்க டாக்டரான பட் தெரிவித்துள்ளார்.

இவர் நேற்றுச் சென்னையில் இடம்பெற்ற வைபவமொன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

"15 வருடங்களுக்கு முன்னர் இத்தகைய சிகிச்சைகளில் மூன்றில் ஒன்றே வெற்றியளித்தது.

"ஆனால் தற்போது நவீன வைத்தியத்துறை வளர்ச்சிகள் காரணமாக இச்சிகிச்சை 90 சத வீதம் வெற்றியளித்துவருகின்றது" என்றார்.

சிறுநீரக மாற்றுச் சிகிச்சையில் பொருத்தமில்லாத சிறுநீரகங்களைக்கூடத் தகுந்தவிதத்தில் பொருத்தமுடிகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆரின் தேகசுகம் பற்றியும் அவர் குறிப்பிட்டார். அப்போது அவர், திரு. எம். ஜி. ஆர் சிறிது சிறிதாகப் பேசி வருகிறார் எனவும் தெரிவித்தார். (இ)

# இன்றைய பலன்

மாதம்: ஆவணி
திகதி: 13 (1985-8-29)
நாள்: வியாழன்
திதி: சதுர்த்தி பி. ப. வரை
நக்ஷத்திரம்: அவிட்டம் பி. இ. வரை

மேடம்: எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைப்படலாம். சிலர் வாழ்க்கையில் கடன் தொல்லையும் அதிகரிக்கும். சகோதர சஞ்சலத்திற்கும் இடமுண்டு.

இடபம்: அந்தஸ்தில் உயர்வு தென்படும். உறவுகள் பலப்படும். உள்ளத்தில் உவகை தள்ளும். உயர்வுக்கும் வழி பிறக்கும்.

மிதுனம்: நல்ல காரியங்கள் ஆரம்பிப்பதற்கு இன்றுபொன்னான நாள். தொழில் புரியும் இடத்தில் பாராட்டுக்கு இடமுண்டு.

கடகம்; பகைவர்கள் பதுங்குவர். பாதையில் தடைகளுமுண்டு; நம்பிக்கை மோசடி மூலம் பணமும் பறிபோகலாம். முன்னெச்சரிக்கை நன்று.

சிங்கம்: இல்லத்தில்இனிமை தவழும். வெளியிடத் தொடர்புகள் பெருகும். இனசனங்களின் உதவியுடன் செல்வாக்கும் உயரும்.

கன்னி: எதிர்பாராத பணமுடை ஏற்படும். கடன்தொல்லையால் கஷ்டப்படுவீர்கள். தொழில்துறையில் தொல்லைகள் தோன்றிமறையும்.

துலாம்: புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். மற்றவர்கள் மத்தியில் நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொள்வீர்கள். பெரியோர்கள் ஆசியும்உண்டு.

விருச்சிகம்: தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். நன்மையான இடமாற்றமுமுண்டு.

தனுசு: பொருளாதார நிலை சீரடையும். வெளியூரிலிருந்து செய்தியும் கிடைக்கும். சகோதரவழிச் சுகமும் உண்டு.

மகரம்; அதிக சிந்தனை சிறிய தலையிடியைக் கொடுக்கும்; உடல்நலம் பாதிக்கப்படலாம்; மனத்திடம் வேண்டும்.

கும்பம்: மனக்கோட்டை கட்டுவீர்கள். எதிர்பார்த்ததில் ஏமாற்றம் விளையும்; அபாயகரமான காரியங்களைத் தவிர்க்கவும்,

மீனம்: ஒளிமயமான சூழ்நிலை உருவாகும். வீட்டிலுள்ளவர்களின் அன்பும் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும்; இனிமையான சம்பவங்களும் உண்டு.

திருமலை
— வே. ரவீந்திரன் —

# அடகு நகைகளை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"உங்களை நம்பித்தான் காசையும் வட்டியையும் கட்டினோம். இதுவரை காசு கட்டாதவர்களிடம், இந்த வருட வட்டியை அறவிடாதே" என்று பெண்கள் கோஷமிட்டனர்.

"காசும் வட்டியும் கட்டி ஒருவருடமாச்சு, நகையும் இல்லை பணமுமில்லை" என்று அடகு வைத்தவர்கள் தெரிவித்தனர்.

"கன்னாதிட்டி கிளையில் கொடுக்கிறார்கள். உங்களுக்கு கொடுக்கமுடியாதா?" எதற்காக நாள் வந்து ஏமாறுவது என்று கேள்விகளை எழுப்பினார்கள்.

"உங்கள் நகைகள் மட்டுமல்ல எங்கள் வீட்டு நகைகளும், அடைவில்தான்" என்று ஒரு ஊழியர் கூறினார்.

சைக்கிளில்வந்த லிகிதர் ஒருவரைப் பெண்கள் சுற்றி வளைத்து வாக்குவாதப்பட்ட போது, மற்றும் ஊழியர்கள் சைக்கிளுடன் அவரை மீட்டுச் சென்றனர்.

ஆர்ப்பாட்டம் உச்சக்கட்டத்தையடைந்து எங்கும் ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருந்தபோது ஊழியர்கள் அவ்விடத்தை விட்டு அகன்று பிரதேச காரியாலய வாசலுக்கு சென்றார்கள்; அதன்பின் பெண்களின் மறியல் தொடர்ந்து நடைபெற்றது.

கன்னாதிட்டி மக்கள் வங்கி கிளையை நேற்றுக்காலை திறந்து வேலைசெய்ய ஆரம்பித்த போது, இதுவரை நகைகள் பெறாத பெண்கள் வாசலில் நின்று நகைகளைத் தருமாறு கூறினார்கள். சங்கானைக் கிளையைச் சேர்ந்தவர்களும் அங்கு வந்து வங்கி முன்னால் மறியல் செய்தனர். இதனைத் தொடர்ந்து ஊழியர் வெளியேறி வங்கியைப் பூட்டிவிட்டுச் சென்றனர்.

யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள மக்கள் வங்கி கிளையில் நூற்றுக்குமேற்பட்ட பெண்கள் வாசலில் மறியல் செய்ததினால், கடமைக்குவந்த ஊழியர்கள் உள்ளே செல்லமுடியாமல், வீதிஓரத்தில் நின்றார்கள். யாழ். நவீன மார்க்கட் மேல்மாடி மக்கள் வங்கி கிளையிலும், அடகு வைத்தவர்கள் மறியல் செய்தார்கள்.

நகைகள் கிடைக்காவிடில், வெள்ளிக்கிழமையும் மறியல் தொடரும் என்று மறியலில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ஈ)

மே(f)பெயர் மினி சினிமா
(கன்னாதிட்டி காளிகோவில் அருகில்)
10-30, 2-15, 5-15
சந்திரசேகர் - அம்பிகா நடித்த
நாகம்
பாம்பினதும் நாயினதும் சாகசம் நிறைந்த படம்.

"லதா" மினி
(கோண்டாவில்)
10-30, 3-30, 6-45
சுமன் - சத்தியராஜ்
மர்ம மனிதன்

S.T.L. மினி சினிமா
திருநெல்வேலி
26-8-85 முதல்
5 காட்சிகள்
HELL CATS
War Film

பாலகன் V.V.
(சாந்தி முன்பாக)
Daily 5 Shows
THE BLUE LAGOON
(Adult Only)

நியூ சினிமாலயா
[R. G பில்டிங் மேல்மாடி]
10-30, 12-30, 2-30, 4-30, 6-30
Attack Force
யுத்தம் புதிய பிரதி
பயங்கர தாக்குதல்கள் நிறைந்த படம்
பலரின் வேண்டுகோளுக்கு இணங்க திரையிடப் படுகின்றது

சரவணபவன் மினி சினிமா
(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
4 x 4 திரையில்
10-30, 2-15, 4-30, 7-00
UNCOMMON VALOUR
கேணல் ஜேசன் ரொட்ஸ் என்பவர் வியட்னாமில் காணாமல்போன தன் மகனைத் தேடி கெரில்லா பயிற்சி பெற்ற வீரர்களுடன் செல்கின்றார். அங்கு நிகழும் மோதல்கள் எழுத்தில் வடிக்கமுடியாதவை. Hell Cats, Code Name Wild Geeseக்குப் பின் மீண்டும் ஒருவிருந்து Action-Packed-Adventure

வெலிங்டன்
10-30, 2-15, 4-15, 6-30 p.m.
26 ம் திகதி மட்டும்
புரூஸ்லி நடித்த
THE DRAGON DIES HARD
கராட்டி Film
27 - 30 வரை
அந்த ஏழு நாட்கள்

ரியோ சினிமா
10-30, 2-30, 6-30
2-வது மாதமாக ஓடுகிறது!
சிவகுமார்,
சிவச்சந்திரன்,
பூர்ணிமா ஜெயராம்,
லக்ஷ்மி, ஜெய்சங்கர் நடித்த
பாலு மகேந்திரவின்
நீங்கள் கேட்டவை
கலர்

## அந்திரான் அழகன் தேர் உற்சவம் இன்று

ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்காகவே ஆலயங்கள் அமைக்கப்பெற்றன எனலாம். ஆ என்ற ஆன்மா லயப்படும் இடமே ஆலயமாகும். இறைவன் எங்கும் நிறைந்தவன் என்றும், அவன் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் என்று எமது மதம் கூறியபொழுது, அவனுக்கு என்றே ஆலயங்கள் அமைக்கப்படுகின்றன. இவ்வாறே ஆன்மாக்களின் ஈடேற்றம் கருதி நவ ஆலயங்களைத் தன்னகத்தே கொண்ட நவாலியில் தனிப்பெருமை மிக்க ஆலயமாய் திகழ்வது அந்திரான் பதியுறையும் அழகனின் ஆலயமாகும்.

ஆலயத்தின் பழமையையும், பெருமையையும் சான்று பகருவதற்கு என ஆலயத்தின் தெற்குப் புறத்தே, அமைந்த ஆதி வைரவரின் ஆலயமும், மாமரமும் இங்கு சிறப்புற்றுத் திகழ்கின்றன. கணபதியையும், வைரவரையும் பரிவாரங்களாக கொண்ட அந்திரான் முருகன் அடியவர்களின் வினைகளைக் களைய வெள்ளி ஆவணித் திங்கள் பூரணையில் தீர்த்தமதை ஆடுவது வழக்கமாகும். இம் மாதம் 21-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான திருவிழா ஒன்பதாம் நாளாகிய இன்று 29-ம் திகதி இரதோற்சவமும் நாளை தீர்த்தத் திருவிழவும் இடம்பெறும். அவனடி தொழுது அருள் பெறுவோம்.

நவாலியூரான்
ஏ. எஸ். ஜி.

## தமிழர்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது தோல்வியைத் தழுவி அரச படைக்கெதிரான அம்புகள் மீண்டும் எய்தும் நிலையை உருவாக்குமா என்பது தொக்கி நிற்கும் கேள்வி என்றாலும், மொழியால் ஒன்றுபட்ட இரு சாராரும் சுயநிர்ணய உரிமை மூலம் தமது பிரச்னைகட்கு பரிகாரம் காணவே விழைகின்றனர்.

எனவே முஸ்லீம்கள் தீவிரவாத, சுயசிந்தனையுள்ள, தெளிவான தலைமையொன்றையுருவாக்கி முற்போக்கான சக்திகளுடன் இணைந்து நேசப்பிணைப்புகளை ஏற்படுத்தி போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டும். விளைவுகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாது நியாயத்திற்காக உரிமை கோரிய எந்த இனமும் தோற்றதாக சரித்திரமில்லை என்பதை எண்ணுவோமாக.

உஷா மினி
10-30, 2-30, 4-45, 6-45
OPERATION DAY BRAKE

லிபேர்ட்டி மினி
வெலிங்டன் சந்தி அருகாமை
10-30, 12-30, 2-30, 4-45
"HELLCATS"
வயது வந்தவர்கள் மட்டும்

ஸ்ரான்லி மினி
3'X5' திரைவானில்
10-30, 12-30, 2-30
4-30, 6-30
LAST ORGY
ஹிட்லர் ஆட்சியில் மக்களுக்கு செய்த கொடுமைகளையும் அவர்கள் பட்ட துன்பங்களையும் சித்தரிக்கும் படம்.
Adults only

# செயலறிக்கை டில்லியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### இந்திய நிபுணர் தயாரித்தது

புதுடில்லியில் இப்பொழுது தயார் நிலையில் இருக்கும் மேற்படிச் செயலறிக்கை, இந்திய நிபுணர்கள் குழுவொன்றினால் தயாரிக்கப்பட்டது.

இக்குழுவுக்கு, இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரி தலைமை வகித்தார்.

செயலறிக்கையின் விபரங்களை மிகவும் இரகசியமாக வைத்திருக்கும் மேற்படி நிபுணர்கள் குழு, சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த அறிக்கையைப் பூரணமாக வாசித்து கையொப்பமிட்ட பின்னரே விபரங்களை வெளியிட விரும்புகிறது என்று புதுடில்லியிலிருந்து வெளியான தகவல்கள் தெரிவித்தன.

### ஹெக்டர் கையொப்பம்

தற்பொழுது புதுடில்லியில் தங்கியிருந்து, பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியுடனும், இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரியுடனும் பல தடவைகள் பேச்சுவார்த்தை நடத்திவரும் இலங்கை சிறப்புத் தூதர் கலாநிதி ஹெக்டர் ஜெயவர்த்தன, செயலறிக்கையில் எந்த நேரத்திலும் கையொப்பமிடலாம் எனவும் அதே நேரத்தில், சென்னையிலுள்ள தமிழ்த் தீவிரவாதக் குழுக்களின் தலைவர்களின் வருகை புதுடில்லியில் எதிர்பார்க்கப்படுகிறது என்றும் நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவித்தன.

### ரொமேஷ்—உமா தொடர் சந்திப்பு

நிலைமை இவ்வாறிருக்க இப்பொழுது புதுடில்லியில் தங்கியிருக்கும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் திரு உமா மகேஸ்வரன், வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரியுடன் தொடர்ச்சியாக ஆலோசனை நடத்தி வருகின்றார்.

கலாநிதி எச் டபிள்யூ. ஜெயவர்த்தனவுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களின் விபரம் சம்பந்தமாக திரு. உமா மகேஸ்வரனிடம் திரு. ரொமேஷ் பண்டாரி விளக்கமாக எடுத்துக் கூறி, ஆலோசனை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

### ஜனாதிபதி டிக்ஸிற் சந்திப்பு

இதே நேரத்தில், இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் திரு. ஜே. என். டிக்ஸிற் இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்து புதுடில்லியில் நடைபெற்றுவரும் 'அர்த்தபூர்வ முயற்சிகள் சம்பந்தமாக விளக்கமாகக் கூறிவருகிறார். நேற்றுமுன் தினமும் மேற்படி சந்திப்பு இடம்பெற்றது.

### அமைச்சர் அல்விஸ் விளக்கம்

இதற்கிடையே நேற்று, கொழும்பில் நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தைத் தொடர்ந்து அமைச்சரவைப் பேச்சாளர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில் இலங்கை இனப் பிரச்னை குறித்து அரச தரப்பினருக்கும் தமிழர் பிரதிநிதிகளுக்குமிடையில் மீண்டும் பேச்சுவார்த்தையைத் தொடருவதற்காக, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக நம்பிக்கை வெளியிட்டார்.

புதுடில்லியில் தற்சமயம் இதுபற்றி ஆலோசனைகள் நடைபெற்றுவருவதால் தாம் எதுவித அபிப்பிராயத்தையும் வெளியிட விரும்பவில்லை என்றும், ஹெக்டர் ஜெவர்த்தன தற்சமயம் புதுடில்லியில் தங்கியிருப்பதாகவும், அவர் அங்கு தங்கியிருப்பது அவசியம் என்று கருதப்படும்வரை தொடர்ந்து புதுடில்லியில் இருப்பார் என்றும் அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் கூறினார்.

### தீவிரவாதத் தலைவர்கள் டில்லி விஜயம்

தமிழ்த் தீவிரவாதக் குழுக்களின் தலைவர்கள் நேற்று புதுடில்லி வருவார்கள் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அவர்கள் நேற்று மாலைவரை புதுடில்லி போய்ச் சேரவில்லை.

அவர்களின் புதுடில்லி விஜயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எந்த நேரத்திலும் அவர்கள் புதுடில்லி வரலாம் என்றும் இவ்வார இறுதியில் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை சந்திக்கலாமென்றும் கடைசியாகக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

## சிறையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேனநாயக்கா முன்னிலையில் அவசரகாலச்சட்டத்தின் கீழ் அவர்மீது தாக்கல்செய்யப்பட்ட வழக்கில் மேற்கண்டவாறு கூறினர்.

அரச தரப்புச் சட்டத்தரணி சி. ஆர். டி. சில்வா சாட்சியைக் குறுக்குவிசாரணை செய்தார்.

பிதா. சிங்கராயர் மேலும் கூறியதாவது:-

"இந்தக் கடிதத்தை இப்போது வாசிக்கும்போது, அது யாராலோ ஒருவருக்கு எழுதப்பட்டதாக இப்போது விளங்குகிறது. அக்கடிதத்தை நான் எழுதியபோது மனநிலையில் வெகுவாகக்குழம்பியிருந்தேன். நான் அப்போது ஒரு கருவியாகவே இருந்தேன். எனக்கு அப்போது என்ன எழுதியதென்று தெரியாது.

"இக்கடிதம் எழுதியபோது 53 பேர் கொலை செய்யப்பட்டிருந்தனர். நான் அப்போது மனரீதியாக பாதிக்கப்பட்டிருந்தேன். என்நிமித்தம் எவரும் துன்புறுத்தப்படுவதை நான் விரும்பவில்லை.

"3 காரணங்களுக்காக இந்தக் கடிதத்தை எழுதினேன். ஆனால் எனது நோக்கம்தனியாகவே இருந்தது. இந்தக்கடிதம் மாத்திரமல்ல இன்னும் பல கடிதங்களை எழுதும்படி அவர்கள் சொன்னார்கள்.

"சிறைச்சாலையில் இருந்தபடி சிறை உடைப்புச் சம்பவம் பற்றி எழுதிய ஞாபகம் எனக்கு சுயாதினமாக இல்லை.

"சிறை உடைப்புச் சம்பவம் தொடர்பாக நான்கு அல்லது ஐந்து கடிதங்கள் எழுதினேன். சகல கடிதங்களையும் எழுதியபொழுதும் குழம்பிய நிலையிலேயேதான் இருந்தேன்.

"வணபிதாஜெயதிலகராசாவின் எதிர்காலம் குறித்து எனக்கு அக்கறை இருந்தது அதனால்தான் அவரின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டேன்"

(க)

## யாழ். தபாலக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புமாறு மேலிடத்தால் பணிக்கப்பட்டிருந்தது. இதனைத் தொடர்நது இரு மாதங்கள் தபால்வான் சேவை நடைபெறவில்லை. தபால் அதிபர் கொடுத்த உறுதிமொழியை தொடர்ந்து வான்கள் தொடர்ந்து இங்கு சேவை செய்தன.

வானை எடுத்துச் சென்றவர்கள் உடன் திருப்பி ஒப்படைக்காவிடில் சகல வான்களும் கொழும்பு அனுப் வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் எனக் கூறப்படுகிறது. (க)

## பாலசிங்கம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அளித்துள்ளார்.

இருதமிழ்த் தலைவர்கள் நாடு கடத்தப்பட்டது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியிடம் வருத்தம் தெரிவித்தபோதே திரு.ராஜீவ் காந்தி மேற்படி உறுதி மொழியைத் தெரிவித்தார்.

சமரசப் பேச்சுக்களுக்கு தமிழ்த்தீவிரவாதத் தலைவர்கள் முட்டுக்கட்டையாக இருந்தாலும்கூட 'நாடுகடத்தல்' போன்ற கடுமையான நடவடிக்கை எதுவும் அவர்கள் மீது மேற்கொள்ளப்பட மாட்டாது என்றும் திரு. ராஜீவ் காந்தி திரு. அமிர்தலிங்கத்திடம் தெரிவித்தார்.

## குருநகர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டனர். குருநகர் சீ-நோர் நிறுவனத்திலிருந்து காலை 10 மணிக்கு ஆரம்பித்த ஊர்வலத்தில் சுலோகஅட்டைகள் சகிதம் அமைதியான முறையில் சென்று கொண்டிருந்தனர். சுலோக அட்டைகளில் பின்வரும் வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன.

உண்ணாவிரதக் கைதிகளின் உணர்வுகளுக்கு மதிப்பளி! அல்லது விசாரணை செய்! தமிழ் மக்களே பார்வையாளர்களாக நிற்காது பாதையில் அணி திரளுங்கள், தமிழர்களின் நிரந்தர விடுதலைக்கு வழி செய். அரசியல் கைதிகளைச் சித்திரவதை செய்யாதே! தங்காலைச் சிறைக் கைதிகளை விடுதலை செய்! ஏகாதிபத்திய அரசே! விடுதலைப் போராளிகளை விடுதலை செய்!

ஹெலிக்கொப்டரொன்றும் இராணுவ வீரர்களுடன் தாழப்பறந்து ஊர்வலத்தை அவதானித்துக் கொண்டிருந்தது ஊர்வலம் யாழ். பிரதான வீதி, ஆஸ்பத்திரி வீதி, மின்சார நிலைய வீதி, விக்டோரியா வீதி. பருத்தித்துறை வீதி வழியாகச் சென்று மீண்டும் குருநகரை அடைந்தது. [ச]

## ரூபவாஹினி

மாலை

5-00 செய்திகள்
5-05 சிறுவர் நிகழ்ச்சி
5-30 வாராந்த குறுக்கெழுத்து நிகழ்ச்சி
6-00 பௌத்த உரை (தமிழ்)
6-15 பௌத்த உரை (ஆங்கிலம்)
6-30 செய்திகள் (தமிழ்)
6-50 காலங்கள் (தமிழ் தொடர் நாடகம்)
7-25 "புண்ணிய பூமி" (விவரணச்சித்திரம்)
8-00 செய்திகள் (சிங்களம்)
8-25 'சதுட்டு கந்துலு' [சிங்கள நாடகம்]
9-00 செய்திகள் [ஆங்கிலம்]
9-30 அனுசாசனு
10-00 இசை நிகழ்ச்சி [சிங்களம்]
10-35 யப்பானிய "சென்" ஆலயம் பற்றிய விவரணச் சித்திரம்
11-20 சிங்கள நிகழ்ச்சி
11-30 ஒளிபரப்பு முடிவு

## ஏனைய ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒற்றுமை ஏற்படவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

தற்போது எமது பக்கம் நியாயம் உண்டு எனவே உடனடியாக புதுடில்லி வாருங்கள்' என்று திரு உமாமகேஸ்வரன் ஈழதேசிய விடுதலை முன்னணிக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# அடகு நகைகளைக்கோரி 200 பெண்கள் ஆர்ப்பாட்டம்!

## கண்ணுதிட்டியில் வங்கி ஊழியர் வெளியேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதான வீதி, 3-ம் குறுக்குத் தெருச் சந்தியில் மக்கள் வங்கி ஊழியர்களை நகைகளை அடகு வைத்த சுமார் 200 பெண்கள் சுற்றி வளைத்து ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனால் போக்குவரத்து தடைப்பட்டது.

பிரதான வீதி மக்கள்வங்கி கிளைக்கு முன்பாக நேற்றுக் காலை சுமார் 200 பெண்கள் மறியல் செய்தனர்.

வங்கிக்கு வந்த ஊழியர்களை உள்ளே செல்லவிடாது தடுத்தபோது வங்கி ஊழியர்கள் வீதிக்கப்பால் சென்று நின்றனர். மறியல் இருந்த பெண்கள் எழுந்துசென்று ஊழியர்களை சுற்றி வளைத்து கேள்விகளை தொடுத்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## மிதிபலகையில் நின்று பயணம்: பாலத்துடன் தலைமோதி இளைஞர் பலி!

(யாழ்ப்பாணம்)

வேலணையில் நேற்று நடந்த வாகன விபத்தில் 22 வயதான சி. குமார் என்பவர் மரணமானார்.

வான் மிதிபலகையில் நின்று கொண்டு பயணம்செய்த போது இந்த விபத்து நடந்த தாகக் கூறப்படுகிறது.

தலையில் காயத்துடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

இவர் குறிகட்டுவானிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த மினிவானென்றின் மிதி பலகையில் நின்றவண்ணம் பிரயாணம்செய்ததாகவும், பண்ணைப் பாலத்துடன் மோதுண்டு தலைசிதறி நிலையில் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ச)

## மூன்று நாள் கிரிக்கெட் — டிரோன்பர்ணண்டோ கேடயம் இலங்கை கோஷ்டி வசம்

(கொழும்பு)

இந்தியக் கிரிக்கெட் கோஷ்டிக்கும், இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற மூன்று நாள் போட்டியில், இலங்கைக் கோஷ்டி 'டிரோன் பர்ணண்டோ' வெற்றிக் கேடயத்தைத் தட்டிக் கொண்டது.

நேற்று 5 விக்கெட்டுக்கள் நஷ்டத்துக்கு 202 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், இலங்கைக் கோஷ்டி தொடர்ந்து துடுப்பெடுத்தாடி 9 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 360 ஓட்டங்களைப் பெற்றதும் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் அசந்தா குருசிங்கா சிறப்பாகத் துடுப் பெடுத்தாடி 102 ஓட்டங்களையும், ரூயாவீரா 70 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதன்பின் துடுப்பெடுத்தாடிய இந்தியக் கோஷ்டி தனது 2-வது இன்னிங்ஸில் நேற்றைய ஆட்டம் முடிவடையும் போது 6 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 123 ஓட்டங்களைப் பெற்றது.

மேற்படி மூன்றுநாள் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த போதிலும், இலங்கைக் கோஷ்டி இந்தியக் கோஷ்டியைவிட முதல் இன்னிங்ஸில் 111 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றமையால், 'டிரோன் பர்ணண்டோ' வெற்றிக் கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது. (வி)

## வவனியா சம்பவம்: ஒரே குடும்பத்தைச் சேர்ந்த எண்மர் பலியானார்கள்!

(வவனியா)

வவனியா - கண்டி வீதியில் இடம்பெற்ற வன்முறைச்சம்பவத்தில் அடையாளம் காணப்படாது ஆஸ்பத்திரிப் பிரேதச் சாலையிலிருந்த எட்டுச் சடலங்களில் ஏழு சடலங்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று தெரியவருகின்றது.

முன்னாள் வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரத்தின் தோட்டத் தொழிலாளியான நடராசாவின் மனைவியும் பிள்ளைகளும் இறந்தவர்களாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

நடராசா ஏற்கனவே இராணுவத்தினரால் சுடப்பட்டு மரணமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு முத்தையா

(உத்தரவுபெற்ற வர்த்தகர் A. D. 55)

முத்தையா அம்மான் என்று அன்பாகஅழைக்கப்படும் கார்த்திகேசு முத்தையா (உத்தரவ பெற்ற வர்த்தகர் A. D 55) புதன் காலை காலமானார். இவர் தங்கேஸ்வரியின் அன்புக்கணவரும் சந்தானலட்சுமி (சம்பியா), ரோகினிதேவி (தேசிய சேமிப்பு வங்கி - யாழ்கிளை), சிவநாதன் ஆகியோரின் அன்புத்தந்தையும் R, தருமரட்ணம் (பொறியியலாளர் - சம்பியா) அவர்களின் மாமனாரும் ஜனகனின் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல், 11A - கச்சேரி கிழக்கொழும்புத்துறை கண்டிக்குளியில் இருக்கும் அன்னாரின் இல்லத்தில் இருந்து வெள்ளிக்கிழமை காலை 9 00 மணியளவில் ஈமக்கிரியைகளுக்காக தண்டிமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

(289)

## வசதிகுறைந்தவர்களின் விபரம் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் வாழும் வசதி குறைந்த குடும்பங்களின் நன்மைகருதி அவர்களுக்கு அத்தியவசிய சேவைகளை உருவாக்கும் முயற்சியில்யாழ். மாநகரசபை ஈடுபட்டிருக்கிறது. இதற்கான சில அடிப்படை விபரங்களைச் சேகரிக்குப் பொறுப்பை, யாழ். மருத்துவ பீட சமுதாய சுகாதாரப் பகுதி ஏற்றுக்கொண்டுள்ளது.

இது சம்பந்தமான விபரங்களைச் சேகரிப்பதற்காக யாழ் மாநகரசபை சுகாதாரப் பகுதி ஊழியரும் அப்பகுதிசுகாதாரத் தொண்டர்களும்இவ்வாரத்தில் வீடு வீடாகச் சென்றுசிலவிபரங்களைச் சேகரிப்பார்கள் என்றும் அவர்களுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறுப் சமுதாயமருத்துவ பீடத் தலைவர் டாக்டர் என், சிவராஜா கோரிக்கைவிடுத்துள்ளார்.

## நாவற்குழி சித்தி விநாயகர் தேர்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி சித்தி விநாயகர் 14ந் திருவிழாவான இன்று தேரேறி வருகிறார்.

இம் மாதம் 16ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான இம் மகோற்ஸவம் நாளையதினம் நடைபெறும் தீர்த்தோற்ஸவத்துடன் நிறைவுறுகின்றது.

## யாழ். நகர் ஸ்தம்பிதம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காலை 10மணிக்கு நகரிலுள்ள சகல வர்த்தக நிலையங்கள், கடைகள் பூட்டப்பட்டன.

யாழ். அரசாங்க செயலகம், வங்கி, கல்விக்கந்தோர் மற்றும் வீடமைப்பு இலாகா அலுவலகம், தேர்தல் கந்தோர் கூட்டுறவுத்துறை ஊழியர்கள் காலை 10 மணிக்கு வேலைகளை இடைநிறுத்தம்செய்தனர்.

யாழ் மாநகர சபை ஊழியர்களும், வேலைகளை இடைநிறுத்தம் செய்தனர்.

அதிகமான ஊழியர்கள், தங்கள் காரியாலயங்களைவிட்டு வெளியேறினார்கள்.

காலை 10 மணிக்கு பஸ்கள், டாக்ஸிகள், ஓட்டோக்கள், எங்கெங்கு நின்றனவோ, அதே இடங்களில் 12 மணிவரை நின்றன. பிரயாணிகளும் பஸ்ஸிற்குள் 12மணிவரை இருந்தனர்.

சைக்கிளில் எவரையும் செல்லவேண்டாம் என்று இளைஞர்கள் கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து மக்கள் சைக்கிளை உருட்டிக்கொண்டு சென்றனர். சிலர் சைக்கிளை அதே இடத்தில் நிறுத்திவிட்டு சுமார் இரு மணிநேரம் அவ்விடத்தில் நின்றனர்.

ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்திற்கு முன்பாக வீதியின் குறுக்கே ஓட்டோ ரிக்ஷாக்கள் நிறுத்தப்பட்டிருந்தன.

மரக்கறிச் சந்தையில் வியாபாரம் எதுவும் நடைபெறவில்லை.

வீதியோரத்தில் கொய்யாப் பழம், கிறேப்ஸ் விற்பனைகூட இரு மணிநேரம் தடைப்பட்டது.

மக்கள் கூட்டம் கூட்டமாக அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தனர்.

நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்கள் நேரடியாக நிலைமையை அவதானித்துக்கொண்டிருந்தனர்.

இதேசமயம்யாழ் கோட்டையிலிருந்து 'ஹெலிகோப்டர்' யாழ் பஸ் நிலையத்திற்கு மேலாக மிகத் தாழ்வாக பல தடவைகள் பறந்து திரிந்தது

காலை 11-50க்கு சகல வாகனங்களும் 'ஹோன்' அடித்து சத்தம் எழுப்பிக்கொண்டிருந்தன 12 மணிவரை இந்தச் சத்தம் நீடித்து நிறுத்தபபட்டதைத் தொடர்ந்து வாகனங்கள் புறப்பட, கடைகள் வர்த்தக நிலையங்கள் திறக்க, மக்கள் தங்கள் அலுவலகங்களில் (தத்தம் கடமைகளில்) ஈடுபடத் தொடங்கினர். 12 மணிக்குப் பின் யாழ் நகர் வழமைக்குத் திரும்பியது. (க)

## சந்திரகாசன் (புதுடில்லி)

இலங்கைத் தீவிரவாதத் தமிழ் தலைவர் திரு எஸ் சி. சந்திரகாசன் நேற்று நியோர்க்கிலிருந்து எயர் இந்தியா விமானமூலம் பம்பாய் வந்து சேர்ந்தார்

விமானநிலையத்தை விட்டு வெளியேற அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. புதுடில்லியிலிருந்து உத்தரவு வரும்வரை அவர் பம்பாயில் வைக்கப்பட்டிருப்பாரென்று கூறப்படுகன்றது

## மரணப் பிடியில் 21வது நாள்

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடைச்சிறையில் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்தை முறியடிக்க அரசு முயற்சிப்பதாக 'ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல் எவ்) சுவரொட்டிகள் மூலம் தெரியப்படுத்தியுள்ளது'

யாழ். மாவட்டத்திலுள்ள முக்கிய சந்திகளில் 'ஈழம் செய்திப் பலகை' என்றதலைப்பிட்ட சுவரொட்டிகள். உண்ணாவிரதமிருக்கும் அரசியல் கைதிகளின் நிலைமை குறித்து தினசரி தெரியப்படுத்திவருகின்றன இச்சுவரொட்டிகளின் முன்னிலையில் ஏராளமான மக்கள் குழுமிநின்று வாசித்து வருவதை அன்றன்றாடு காணக்கூடியதாகஉள்ளது.

சுவரொட்டியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

"...மயங்கிக் கிடக்கும் போராளிகளைப் பலவந்தப்படுத்தி நீராகாரம் செலுத்துகின்றனர் உறுதி குலையாத போராளிகள் ஊசலாடும் உயிரைக்கொண்டுஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர்; நீராகாரம் செலுத்துவது உயிரைக்காக்கவா? இல்லை உண்மையை மூடி மறைக்கவே!" என்று அச்செய்திப் பலகைச் சுவரொட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (மா)

## 85 ஆகஸ்ட் இரத்தக்கறை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள அரச அலுவலகங்களின் சுவர் '85 ஆகஸ்ட்' என்று எழுதப்பட்டு அதன்கீழ் இரத்தக்கறையுள்ள கையடையாளங்கள் நேற்றுப் பதிந்திருக்கக்காணப்பட்டன.

பாடசாலைகள் ஆஸ்பத்திரிகளில் இவ்வடையாளங்கள் பொறிக்கப்படாதது குறிப்பிடத்தக்கது (மா)

## உண்ணாவிரதம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தந்திகளை நேற்று அனுப்பி வைத்துள்ளனர்.

தென்னிலங்கையிலுள்ள பல்கலைக் கழக மாணவர்கள் தலைவர்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, முதலமைச்சர்கள் எம். ஜி. ராமச்சந்திரன், என். டி. ராமராவ், தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி, தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் எம். கல்யாணசுந்தரம் ஆகியோருக்கும் பல்கலைக் கழக மாணவர்கள் தந்திகள் அனுப்பி வைத்துள்ளனர்.

வெலிக்கடைச் சிறையில் உண்ணாவிரதம்இருக்கும் தமிழ் கைதிகளுககு ஆதரவாக யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் யாழ். பல்கலைக்கழகவளவில் உண்ணாவிரதம் அனுஷ்டித்து வருவது தெரிந்ததே.

கட்டம் கட்டமாக மூன்று நாட்கள் வீதம் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்துவரும் மாணவர்களுடன், பொதுமக்களும் கலந்து கொண்டுஉண்ணாவிரதம் இருந்துவருகின்றனர். நேற்று 25க்குமேற்பட்ட ஆண்களும் பெண்களும் இதில் கலந்துகொண்டனர்.

இன்று மாலையுடன் முதலாவது கட்ட உண்ணாவிரதம் முடிவடையும் என்று பல்கலைக் கழக மாணவர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் இலங்கை-இந்திய அரசியல் தலைவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள தந்தியில்;

"வெலிக்கடைச் சிறையில் 18 மாதங்களுக்கு மேலாக சிறைவைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் இரு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 20நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். விசாரணைசெய்; அல்லது விடுதலைசெய் என்பதே சிறைக் கைதிகளின் முக்கிய கோரிக்கைகளாகும். இவ்உண்ணாவிரதத்துக்கு ஆதரவாக யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மூன்று தினங்களுக்கு ஒருதடவை தொடர்ச்சியாக உண்ணாவிரதம்இருக்கும் போராட்டத்தை கடந்த 27ம் திகதி தொடக்கம் ஆரம்பித்துள்ளனர். இதற்கு ஆதரவாகக் கிராமங்களுக்கும் உண்ணாவிரதப் போராட்டம் விஸ்தரிக்கப்படவுள்ளது உங்கள் செல்வாக்கைப் பிரயோகித்து சிறைக்கைதிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கும்படிகேட்டுக்கொள்ளுகின்றோம்" என்று அத்தந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. (மா)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் [illegible] வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு மார்ச் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 100236/81 Eelanadu P.O. Box 49, Telegram Eelanadu, Telephone; 22389 ,24126,